விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, ஆனி - 13 ஞாயிறு 27.06.2021 மலர் - 2, இதழ் - 82


விஜயபாரதம்

# பின்னணியில் யார்?

ஒன்றியம், ஜெய் ஹிந்த் எதிர்ப்பு... இது எதுவுமே ஸ்டாலினின் திட்டமாக இருக்க முடியாது. அப்படிப்பட்ட பிரிவினைவாதி அல்ல அவர். அந்த பார்வையெல்லாம் அவர் கொண்டதே இல்லை. இது முற்றிலும் வேறு யாரோ பின்னாலிருந்து இயக்குகிறார்கள்.

இவ்வளவு விஷயங்களை செய்வதற்கு திருட்டு சாமர்த்தியம், தேவை, பிரிவினை எண்ணங்களை விதைக்க ஒருசிலரால்தான் முடியும். இந்த முறை மிகவும் துல்லியமாக திட்டமிட்டு, சரியாக காய் நகர்த்தி கொண்டு போகிறார்கள். ஹிந்து கோயில் நிலம்மீட்பு கூட ஒரு ஏமாற்று, திசை திருப்பும் வேலையாக இருக்கலாம். 'பரவாயில்லை இந்த ஆட்சி' என்று பெயர் எடுத்து பெரும்பான்மை ஹிந்துக்களை தன் வசப்படுத்தும் திட்டமாகவும் இது இருக்கலாம்.

வேளாண் மசோதா பற்றி கவர்னர் பேச மறுத்தபோது நீண்டஆலோசனை செய்தார் ஸ்டாலின் என்று செய்தி. அவருக்கு யார் ஆலோசனை சொல்வார்கள்? என்ன சிந்திக்க தெரியும் அவர் கட்சியினருக்கு? தமிழ் தேசியவாதம் பேசும் சில கிறிஸ்தவ தலைவர்களின் யோசனையை கேட்கக்கூட அந்த சிந்தனை இருந்திருக்கலாம்.

ஜகத் கேஸ்பர் மௌனம், இதர கிறிஸ்தவ தலைவர்கள் வெளிச்சத்துக்கு வராமல் அமைதி காப்பது எல்லாம் ஒரே இடத்தை நோக்கியே விரலை சுட்டுகிறது. முதலில் பிரிவினைவாத விஷத்தை தூவு, மக்களை எழுப்பி கிளர்ச்சி செய்ய வை, பிரிய வேண்டும் என்று பேச வை. மத மாற்றத்துக்கு அதுவே நிலம், உரம் எல்லாம்.

மொத்தமாக பிரிய முடியாது. சட்டம் தடுக்கும். ஆனால் கேரளம் போல குற்றங்கள் செய்ய மாநில துணை கிடைக்கும். சிங்களத்தில் சைனா வருகிறது. இந்த நேரத்தில் தமிழகம் பிரிவினை பேசினால்? தவறானவர்கள் கையில் மக்கள் சென்றால்? பிரிவினை வாதம் எடுபட்டு சாலையில் செல்லும் சாதாரண மக்கள் ஒத்துழைத்தால்?

ஆனந்த் வெங்கட்

# ஸ்டாலினுக்கு பிராமண சங்கம் எதிர்ப்பு



விஜயபாரதம்

'தமிழக முதல்வரான ஸ்டாலின், தமிழகத்தின் பெரிய ஹிந்து கோயில்களுக்கான ஆலோசனைக் குழுவின் தலைவராக பொறுப்பேற்க உள்ளார் என்று செய்தித்தாள்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு ஹிந்து அறநிலையத்துறையின் சட்டம் 10வது பிரிவின்படி, பிறப்பால் ஹிந்துவாக இருப்பவரும், ஹிந்து மதத்தின் மீது நம்பிக்கை உள்ளவரும், கடவுள் நம்பிக்கை கொண்டவரும் மட்டுமே ஹிந்து சமய அறநிலையத்துறையில் பொறுப்பேற்க முடியும். அப்படி இருக்கையில், ஸ்டாலின் தன்னை ஒரு நாத்திகர் மற்றும் ஹிந்து கடவுள்களின் மேல் நம்பிக்கை இல்லாதவராக பகிரங்கமாக அறிவித்தவர். எனவே, தகுதி இல்லாத ஒரு நபர் தலைமையில் இந்த குழு இருப்பது சட்டவிரோதமானது. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியாக, முதலமைச்சர் பக்தர்களின் உணர்வுகளுக்கு செவிசாய்க்க வேண்டும். சட்டத்தை மதிக்க வேண்டும். ஆதரிக்க வேண்டும். எனவே முதல்வர் ஸ்டாலின் இந்த ஆலோசனைக் குழுவிற்குத் தலைமை தாங்குவதைத் தவிர்க்க வேண்டும்' என முற்போக்கு பிராமண சங்கம் ஸ்டாலினுக்கு கோரிக்கை விடுத்துள்ளது. மேலும், இந்த கோரிக்கயை வலியுறுத்தி முதலமைச்சரின் தனிபிரிவுக்கும். தமிழக ஆளுநருக்கும் அந்த சங்கத்தின் சார்பில் மின்னஞ்சல் அனுப்பப்பட்டுள்ளது,

# சுழற்சி முறையில் பரிசோதனை



விஜயபாரதம்

பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் கொரோனா தொற்றினை கட்டுப்படுத்த பல்வேறு பாதுகாப்பு மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அரசு, தனியார் அலுவலகங்கள் மற்றும் பொதுமக்கள் அதிகம் கூடும் சந்தைப் பகுதிகளில் சுழற்சி முறையில் ஆர்டிபிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட உள்ளதாக சென்னை மாநகராட்சி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், 'பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் நாள்தோறும் சராசரியாக 25,000 முதல் 30,000 வரை ஆர்டி பிசிஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகிறது. சென்னையில் பொதுமக்கள் அதிகம் கூடும் கோயம்பேடு மார்க்கெட் பகுதியில் 500 நபர்களுக்கும், காசிமேடு மீன்பிடி துறைமுக வளாகத்தில் 500 நபர்களுக்கும், சிந்தாதரிப்பேட்டை மீன் மார்க்கெட் பகுதியில் 100 நபர்களுக்கும் நாள்தோறும் ஆர்டிபிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது. இதன்மூலம், இந்த பகுதிகளில் தொற்று பாதிப்பு பெருமளவு குறைந்துள்ளது. கொரோனா தொற்றுப் பரவல் கட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலையில் மீண்டும் பரவாமல் தடுக்க மேற்குறிப்பிட்ட ஆர்டிபிசிஆர் பரிசோதனைகளுக்கு மக்கள் தங்களது முழு ஒத்துழைப்பை அளிக்க வேண்டும்' என சென்னை மாநகராட்சி கேட்டுக்கொண்டுள்ளது.

## உதயநிதி வெற்றி செல்லுமா?



விஜயபாரதம்

தமிழக சட்டமன்ற தேர்தலில், திமுக சார்பில் சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதியில் உதயநிதி ஸ்டாலின் முதன்முறையாக போட்டியிட்டு வெற்றி பெற்றார். அத்தொகுதியின் தேசிய மக்கள் கட்சி வேட்பாளரான வழக்கறிஞர் எம்.எல்.ரவி என்பவர், உதயநிதி ஸ்டாலினின் வெற்றியை எதிர்த்து, உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். அம்மனுவில், உதயநிதி ஸ்டாலின் தாக்கல் செய்துள்ள வேட்பு மனுவில் தன் மீதான குற்ற வழக்குகள் குறித்து தவறான தகவல்களை அளித்துள்ளார். அவரது வேட்பு மனு ஏற்றுக்கொள்ளப்பட்டது செல்லாது என்று அறிவிக்க வேண்டும். தொகுதியின் தேர்தல் நியாயமாக நடைபெறவில்லை என்று அறிவிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார். இந்த வழக்கு தொடர்பான விசாரணை, ஓரிரு வாரங்களில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## திருப்பூரில் சூடான் இளைஞன் கைது

சூடான் நாட்டை சேர்ந்த 22 வயதான முகமது அல்மும்ஹாலித் என்பவர் கடந்த 2018ம் ஆண்டு 6 மாத சுற்றுலா விசாவில் கோவை மாவட்டம் பொள்ளாச்சி சாலையில் ஈச்சனாரிக்கு வந்துள்ளார். அங்கு தண்டபாணி காம்பவுண்ட் பகுதியில் தங்கியுள்ளார்.



விஜயபாரதம்

இவருடைய விசா 2019ம் ஆண்டிலேயே முடிந்துவிட்டது. ஆனாலும், அவர் சட்டவிரோதமாக தொடர்ந்து கோவையில் தங்கியிருந்தார். வேலை தேடி ஈரோட்டுக்கு இருசக்கர வாகனத்தில் சென்றுவிட்டு, கோவை திரும்பும்போது வாகனத்தில் பெட்ரோல் தீர்ந்துள்ளது. அவரிடம் கையில் பணம் இல்லாததால், கணக்கம்பாளையம் கிராமத்தில் சிலரிடம் பெட்ரோல் வாங்க பணம் கேட்டுள்ளார். இதில் சந்தேகமடைந்த கிராம மக்கள் பெருமாநல்லூர் காவல்துறையினருக்கு தகவல் அளித்தனர். அதன்பேரில் அவரை பிடித்து விசாரித்தபோது இந்த விவரம் தெரியவந்தது. இதையடுத்து அவருடன் தொடர்பில் இருந்த நபர்கள், அவர் பயங்கரவாத செயல்களில் ஈடுபட்டுள்ளாரா, பின்னணி உள்ளிட்டவை குறித்து காவல்துறையினர் தொடர்ந்து விசாரித்து வருகின்றனர். சமீபத்தில் சட்டவிரோதமாக குடியேறிய 4 வங்க தேசத்தவர்கள் திருப்பூரில் கைது செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.



விஜயபாரதம்

## மோடி - யோகி சந்திப்பு

உத்தரப் பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத்துடன் பிரதமர் நரேந்திர மோடி மெய்நிகர் சந்திப்பில் உரையாடினார். அந்த சந்திப்பில் அயோத்தியின் வளர்ச்சி, எதிர்கால தேவைகள், நவீனமயமாக்கல், சாலைகள், ரயில் நிலையம், விமான நிலையம் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகள் என பல்வேறு விஷயங்கள் விவாதிக்கப்பட்டன. முன்னதாக, இந்த ஆண்டின் தொடக்கத்தில் அயோத்தியில் ஒரு சர்வதேச விமான நிலையத்திற்கான உ.பி அரசின் கோரிக்கையை மத்திய அரசு ஏற்றுக்கொண்டது அதற்கு மாநில அரசு சுமார் ரூ. 1,000 கோடியை ஒதுக்கியுள்ளது. மத்திய அரசு ரூ. 250 கோடியை வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# முன்னாள் அமைச்சரின் உதவியாளர்கள் கைது

மஹாராஷ்டிரா மாநில உள்துறை அமைச்சராக இருந்த தேசியவாத காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அனில் தேஷ்முக், ஊழல் குற்றச்சாட்டு காரணமாக பதவி விலகினார். அவர் மீது ஊழல் வழக்கு பதிவு செய்து சி.பி.ஐ விசாரித்து வருகிறது. இந்த வழக்கு சம்பந்தமாக அனில் தேஷ்முக் வீடு உள்ளிட்ட அவருக்கு சொந்தமான இடங்களில் அமலாக்கத் துறையினர் சோதனை செய்தனர். மேலும், இந்த பண மோசடி வழக்கில் அனில் தேஷ்முக்கின் தனி செயலர் சஞ்சீவ் பாலாண்டே, தனி உதவியாளர் குந்தன் ஷிண்டே ஆகியோரை அமலாக்கத்துறையினர் தற்போது கைது செய்தனர். அவர்கள் விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை என கூறப்படுகிறது. அடுத்ததாக, அனில் தேஷ்முக்கையும் நேரில் ஆஜராக அமலாக்கத்துறை சம்மன் அனுப்பி உள்ளது.



விஜயபாரதம்

# அமைச்சரின் டுவிட்டர் கணக்கு முடக்கம்



விஜயபாரதம்

அமெரிக்காவின் பதிவுப்புரிமைச் சட்டத்தை மீறியதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. டுவிட்டரின் திடீர் நடவடிக்கையால் அதிர்ச்சி அடைந்த ரவிசங்கர் பிரசாத், ‘கூ’ சமூக ஊடகத்தில் இது தொடர்பாக பதிவுகளை வெளியிட்டார். அதில், 'நண்பர்களே, இன்று மிகவும் விசித்திரமான ஒன்று நடந்துள்ளது. அமெரிக்காவின் டிஜிட்டல் மில்லினியம் பதிப்புரிமைச் சட்டத்தை மீறியதாக கூறி டுவிட்டர் என் கணக்கிற்கான அணுகலை ஏறத்தாழ ஒரு மணி நேரம் மறுத்து விட்டது. அதன்பின்னர் அவர்கள் எனது கணக்கை அணுக அனுமதித்தனர். டுவிட்டரின் நடவடிக்கை, தகவல் தொழில் நுட்ப விதிகளை முற்றிலும் மீறிய செயல். எனது கணக்கின் அணுகலை மறுப்பதற்கு முன்னதாக முன் அறிவிப்பை செய்ய டுவிட்டர் தவறி விட்டது' என அவர் கூறி உள்ளார்.

# கவர்னரிடம் கிருஷ்ணசாமி மனு

புதிய தமிழகம் கட்சி தலைவர் கிருஷ்ணசாமி, தமிழக ஆளுனரிடம் அளித்துள்ள மனுவில், 'முதல்வராக ஸ்டாலின் பொறுப்பேற்ற பின், அவரும், அவரது அமைச்சர்களும், இந்திய அரசை, 'ஒன்றிய அரசு' என அழைக்கின்றனர். அவர்களின் செயல்பாடுகள் தேசத்திற்கு எதிராக உள்ளன. சட்டசபையில் நீங்கள் படித்த கவர்னர் உரையில் ஒன்றிய அரசு என்று உள்ளது. இது, நாட்டின் இறையாண்மை மீதான பிடியைக் குறைக்கிறது. சுதந்திர போராட்ட வீரர்களை காயப்படுத்துவதாக உள்ளது. தி.மு.க, ஏற்கனவே 1962 சீனா போரின் போது, 'திராவிட நாடு' கோரியது. எனவே, சட்டசபை ஆவணங்களை வரவழைத்து, அதில் இந்தியஅரசு என்று குறிப்பிட வேண்டிய இடத்தில் உள்ள, ஒன்றிய அரசு என்ற வார்த்தையை நீக்குங்கள். ஸ்டாலினும் அவரது சகாக்களும், ஒன்றிய அரசு என்ற வார்த்தையை மீண்டும் பயன்படுத்த அனுமதிக்கக் கூடாது. அதற்கு உடனே முற்றுப்புள்ளி வையுங்கள்' என கோரிக்கை வைத்துள்ளார்.



விஜயபாரதம்

# அறநிலையத்துறை குறை கேட்பு மையம்



விஜயபாரதம்

ஹிந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அலுவலகத்தில், அமைச்சர் சேகர்பாபு, பக்தர்கள் வசதிக்கான பொதுமக்கள் குறை கேட்பு சிறப்பு மையத்தைத் தொடங்கி வைத்தார். 'இந்த சேவையை, பக்தர்கள் அலுவலக வேலை நாட்களில் 044 2833 9999 என்ற எண்ணில் தொடர்புகொண்டு திருக்கோயில் தொடர்பான கோரிக்கைகளைத் தெரிவித்துப் பயன்பெறலாம். குறை குறித்த விவரங்கள் பதிவு செய்யப்பட்டு, சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அனுப்பப்படும். கோரிக்கை பெறப்பட்டதற்கான ஒப்புதல் கோரிக்கைதாரர்களுக்கு உடனுக்குடன் அனுப்பப்படும். கோரிக்கை நடவடிக்கை விவரங்கள் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு 15 நாட்களுக்குள் தெரிவிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்தியா சீனா பேச்சுவார்த்தை



விஜயபாரதம்


இந்தியா சீனா எல்லை விவகாரங்களுக்கான ஆலோசனை மற்றும் ஒருங்கிணைப்புக்கான (WMCC) 22 வது கூட்டம் நடைபெற்றது. இந்தியா சார்பில், கிழக்கு ஆசியாவுக்கான வெளிவிவகார அமைச்சகத்தின் கூடுதல் செயலாளர் தூதுக்குழுவிற்கு தலைமை தாங்கினார். சீன வெளியுறவு அமைச்சகத்தின் எல்லை மற்றும் பெருங்கடல் துறை இயக்குநர் ஜெனரல் சீனக் குழுவுக்கு தலைமை தாங்கினார். அதன் பின்னர் வெளியிடப்பட்ட அறிக்கையில், 'இருதரப்பு உறவுகளில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கு, அமைதியை முழுமையாக மீட்டெடுப்பதை உறுதி செய்ய வேண்டும். அதற்கு ஏதுவாக அனைத்து பிரச்சனைக்குரிய விஷயங்களிலும் முழுமையான தீர்வை எட்டுவதற்காக தூதரக ரீதியிலான பேச்சுவார்த்தை, ராணுவ பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். மூலம் ஒரு பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வை அடைய வேண்டும். இது குறித்த தகவல்தொடர்புகளை பராமரிக்க வேண்டும்' என இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டனர். அடுத்த சுற்று பேச்சுவார்த்தையை விரைவில் துவங்கவும் முடிவு செய்யப்பட்டது.


## விஜயபாரதம் தேசிய வார இதழ்

சந்தா செலுத்த / புதுப்பிக்க
www.vijayabharatham.org
என்ற இணையதளம் அல்லது
044 - 26420870 என்ற தொலைபேசி
எண்ணில் தொடர்பு கொள்ளவும் .

9313 99006

# வங்கதேசத்தில் பொதுமுடக்கம்



விஜயபாரதம்

நமது அண்டை நாடான வங்க தேசத்தில் கொரோனா தொற்று தீவிரமாவதை அடுத்து வரும் ஜூன் 28 முதல் முழுமையான நாடு தழுவிய பொதுமுடக்கத்தை அந்த நாடு அறிவித்துள்ளது. அவசரகால சேவைகளைத் தவிர அனைத்து அரசு மற்றும் தனியார் அலுவலகங்களும் பொதுமுடக்கக் காலத்தில் மூடப்படும் என்று வங்கதேச தகவல் அமைச்சகம் கூறியுள்ளது. அங்கு தினசரி தொற்று 21.22 சதவீதமாக உயர்ந்துள்ளது, இது ஒரு வாரத்திற்கு முன்பு 15 சதவீதமாக இருந்தது. இறப்பு சதவீதமும் உயர்ந்து வருகிறது. இந்த திடீர் நோய்த் தொற்று உயர்வு அங்கு ஒரு பேரழிவை ஏற்படுத்தக்கூடும் என்று நிபுணர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

# கிரே பட்டியலில் பாகிஸ்தான்




விஜயபாரதம்

ஜி 7 நாடுகள் இணைந்து உருவாக்கிய எப்.ஏ.டி.எப் எனப்படும் நிதி நடவடிக்கை பணிக் குழு, உலகளவில் நடக்கும் சட்ட விரோத பணப் பரிமாற்றம் மற்றும் பயங்கரவாதச் செயல்களுக்கு நிதியுதவி செல்வதை தடுக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. பயங்கரவாத ஆதரவு, நிதியுதவி போன்ற காரணங்களால் இக்குழுவின் 'கிரே' பட்டியலில் 2018ல் பாகிஸ்தான் சேர்க்கப்பட்டது. இதனால் சர்வதேச நிதியுதவியை பாகிஸ்தானால் பெற முடியவில்லை. வேறு வழியின்றி பயங்கரவாத அமைப்புகள் மீது, பாகிஸ்தான் ஒரு சில நடவடிக்கைகளை பெயரளவில் எடுத்தது. மேலும், 'எப்.ஏ.டி.எப்., குழு அளித்த 27 செயல் திட்டங்களில் 26 திட்டங்களை நாங்கள் நிறைவேற்றிவிட்டோம். விரைவில் பழுப்பு பட்டியலில் இருந்து பாகிஸ்தான் வெளியேறும் என பாகிஸ்தான் அரசு தெரிவித்தது. இது குறித்து கூறிய எப்.ஏ.டி.எப்., தலைவர் மார்கஸ் பிளைர், பாகிஸ்தான் குறிப்பிடத்தக்க சில நடவடிக்கைகளை எடுத்துள்ளது. எனினும் 27 திட்டங்களில் மூன்று திட்டங்களை இன்னும் முழுமையாக செய்து முடிக்காமல் உள்ளதால், பாகிஸ்தான் தொடர்ந்து 'கிரே' பட்டியலில் வைக்கப்படுகிறது என தெரிவித்தார். இதனால், பாகிஸ்தானுக்கு பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.



# வலையில் சிக்கிய மீம்கள்






# மாவீரன் மானெக்ஷா

பீல்டு மார்ஷல் சாம் மானெக்ஷா, பாரதத்தின் போற்றத்தக்க மாபெரும் ராணுவத் தளபதி. பீல்டு மார்ஷல் என்பது பாரத ராணுவத்தின் மிக மிக உயரிய மரியாதைக்குறிய பதவி.

சாம் மானெக்ஷா, லண்டனில் மருத்துவம் படிக்க நினைத்த அவரை, தனியாக செல்ல தந்தை அனுமதிக்கவில்லை. கோபத்துடன் இந்தியன் மிலிட்டரி அகாடமியின் நுழைவுத் தேர்வை எழுதி, தேர்ச்சி பெற்றார்.

இரண்டாம் உலகப்போரின் போது, 1942ல் சிட்டாங் பிரிட்ஜ் போரில் முதன்முதலாக களம் கண்டார். போரில் அவரது வயிற்றில் ஒன்பது துப்பாக்கி குண்டுகள் பாய்ந்தன. ஆனால் அவர் வீரர்களை தொடர்ந்து வழிநடத்தினார். இது அவரது உயரதிகாரிக்கு தெரிந்தது. உடனே அவர் போர் களத்திற்கு வந்து, அவரது மிலிட்டரி கிராஸ் ரிப்பனை எடுத்து மானெக்ஷாவின் நெஞ்சில் குத்தி "இறந்தவர்களுக்கு மிலிட்டரி கிராஸ் விருது வழங்கப்பட மாட்டது " என பெருமை கொண்டார்.

மானெக்ஷாவிற்கு கூர்கா வீரர்கள் மீது தனி ஈர்ப்பு இருந்தது. கூர்கா வீரர்களை, "ஒரு வீரர் தான் சாவை கண்டு மிரளவில்லை எனக் கூறினால் ஒன்று அவர் கூர்காவாக இருக்கவேண்டும் அல்லது அவர் பொய் கூற வேண்டும்" என்றார். கூர்காக்களும் அவரை 'சாம் பகதூர்' என அன்போடு அழைத்தனர்.

கிழக்குப் பாகிஸ்தான் மீது போர் தொடுக்க வேண்டும் என இந்திராகாந்தி கூறுகையில், அவரது ஆணையை மறுத்து, அதற்கு சரியான காரணத்தையும் கூறினார். அவ்வாறு போர் தொடுத்தால் வேறு தளபதியை நியமித்து கொள்ளுங்கள் என்றும் கூறினார் மானெக்ஷா.

வெளிப்படையாக பேசும் தன்மை காரணமாக, அவருக்கு பீல்டு மார்ஷலுக்கான எந்த சலுகையும் வழங்கப்படவில்லை. இதனால் அவர் மரணமடைந்த போது அரசியல் தலைமை, முப்படை தளபதிகள் யாருமே அவரது இறுதி சடங்கில் பங்கேறவில்லை.

அவர் ஓய்வு பெற்ற போது, பெரும்பாலானோர் தங்களிடையே ஒரு மாபெரும் ராணுவத் தலைவர் வாழ்கிறார் என்பதையே மறந்துவிட்டனர். 1962 போரினால் துவண்டு போயிருந்த பாரத ராணுவத்தின் மாண்பை தூக்கி நிறுத்திய வீர்ர் இவர்.

ப மகிரிஷன்

விஜயபாரதம்







# பங்கிம் சந்திர சட்டர்ஜி

விஜயபாரதம்

அன்றும் இன்றும் ஒட்டுமொத்த இந்தியாவும் தனது ஒரே கோஷமாக ஒலிக்கும் மந்திர வார்த்தையான 'வந்தேமாதரம்' என்ற கோஷத்தை 'ஆனந்தமடம்' என்ற நாவல் மூலம் எழுதி, நாட்டின் சுதந்திரப் போராட்டத்துக்கும் தேசபக்தர்களின் மனதில் சுதந்திர கனலை உருவாக்கவும் காரணமாகவும் இருந்தவர் பங்கிம் சந்திர சட்டர்ஜி.

இவர்1838 ஜூன் 26ல் கொல்கத்தா அருகில் உள்ள கந்தலபாறை என்ற இடத்தில் துர்கா சுந்தரி தேவி ஜாதவ் சந்திர சட்டோபாத்தியாயா தம்பதியரின் மூன்றாவது மகனாகப் பிறந்தார். ஜாதவ் சந்திரர் ஒரு துணை நீதிபதி. பங்கிமின் மூத்த சகோதரர் சஞ்சீவ் சந்திராவும் ஒரு புகழ் பெற்ற எழுத்தாளர். பங்கிம் சந்திரர், வங்காளத்திலும் நாடு முழுவதிலும் நன்கு அறியப்பட்டவர். இலக்கிய மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்.

படிப்பை முடித்துக் கொண்டு 1858 முதல் 1891 இல் அவர் ஒய்வு பெறும் வரைஆங்கிலேய அரசில் துணை நீதிபதியாகவும் பின்னர் துணை ஆட்சியராகவும் பணி புரிந்தார். ஆங்கில அரசாங்கத்துடன் அவ்வப்பொழுது மோதல்கள் நிகழ்ந்தாலும் தன் பணியை அவர் சிறப்புறச் செய்து வந்தார்.

தொடக்கக்காலத்தில் பங்கிமின் எழுத்துப் பணி, ஈஸ்வர சந்திரா குப்தா என்பவர் வெளியிட்ட வாரந்தரியான 'சங்க்பத் பிரபாகர்' என்ற இதழில்தான் தொடங்கியது. பங்கிமின் முதல் நாவலான 'ராஜ்மோகனின் மனைவி' என்ற நாவல் முதலில் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு வெளியிடப்படாமலே இருந்தது. பின்னர் பங்கிம் வங்காளத்தில் எழுதி வெளியிட்டார்.

அவர் வங்காள மொழியில் எழுதிய முதல் நாவல் துர்கேஷ் நந்தனி. மேலும், கபால குந்தளம், மிர்ணாளினி, தேவி சௌதாரிணி, ஆனந்த மடம் போன்றவை அவருடைய மிகச் சிறந்த நாவல்கள். அரசியல், பொருளாதாரம், சமுகம், மதம், தத்துவம், விஞ்ஞானம் என பல நூல்களை எழுதியுள்ளார். உடல் நலக் கோளாறு காரணமாக அவர் தனது பணியிலிருந்து 1896ல் விருப்ப ஒய்வு பெற்றார். பின்னர் ஆன்மிகத்தில் ஈடுபட்டார். 1894 ஏப்ரல் மாதம் 8ம் நாள் தனது 56 ஆம் வயதில் இயற்கை எய்தினார்.